விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 16 ஜுலை 24 இதழ் 172

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-8-1986

## 'போராளிகளுக்கு உரிய பங்கு அளிக்கப்படவேண்டும்''

சென்னை, ஜுலை 30

''இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கான மாகாண சபைத்திட்டங்களில் நிர்வாகப் பகிர்ந்தளிப்பில் போராளிகளுக்கும் உரிய பங்கு அளிக்கப்படவேண்டும்'' என்று கிராமியத் தொழிற்துறை அமைச்சர் திரு எஸ் தொண்டமான் சென்னையில் இந்திய உயர்மட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளின்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசு தமிழ்தலைவர்களுடன் நடத்தும் பேச்சுக்களின்போது காணப்படும் உடன்பாடுகளில் போராளிகளுக்கும் உரியபங்கும், கூடிய

(4ம் பக்கம் பார்க்க)

## இரு இராணுவ அதிகாரிகள்

கொழும்பு, வியாழன்

வடபகுதி இராணுவத் தலைமைப் பீடத்திற்கு இருவர் நியமிக்கப் பட்டுளளார்கள்- கேர்ணல் ஜெரிசில்வா வட மாகாண இராணுவ இணைப்பதிகாரியாகவும், கேர்ணல் திலக் பொன்னம்பெரும வட மாகாண இராணுவத் தளபதியாகவும் இயங்குவார்கள்.

### ● அமைச்சர் 'தேவா' கலந்துகொண்ட விழாவில்

# படையினர் - போராளிகள் மோதல்

# பொலிஸ்சாரதி பலி, 2 பேர்காயம்

(கொழும்பு)

**கல்குடா தொகுதிக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் அங்கு செங்கலடி கிராமிய வைத்தியசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட சமயம் அதிரடிப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே இடம்பெற்ற நேரடிச் சமரில் பொலிஸ்படை சாரதி பலியானுர்; விஷேச அதிரடிப்படை அதிகாரியும், பொலிஸார் ஒருவரும் பலத்த காயமடைந்தனர்:**

மட்டக்களப்பு செங்கலடியில் உளநாட்டுஅலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம கலந்து கொண்ட கிராமிய வைத்தியசாலைத் திறப்பு விழா வைபவமொன்று குழப்பநிலையில் முடிவுற்றது.

கிராமிய வைத்தியசாலைச் சுற்றாடலில் பாதுகாப்புரோந்து நடவடிக்கைகளில ஈடுபட்டிருந்த பொலிஸ் படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியபோதுபொலிஸ்படை ரோந்து வாகன சாரதி ஓமர்டீன் கொல்லப்பட்டார்

விஷேச அதிரடிப்படைப் பொலிஸ் அதிகாரியும், மற்றொரு பொலிஸ்காரரும்பலத்த காயமடைந்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்த அதிரடிப்படை பொலிஸார் உடனடியாகக் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

அமைச்சர் திரு. தேவநாயகம் செங்கலடியில் புதியதபால்

[5- பக்கம் பார்க்க]

செங்கலடிச் சம்பவம்:

## ஆசிரியை, சாரதி பலி மூவர் படுகாயம்

[நமது நிருபர்]

அமைச்சர் திரு. தேவநாயகத்துக்கு பாதுகாப்பளிக்கும் நோக்கமாக வீதியில் அதிரடிப் பொலிசார் ரோந்து சென்ற ஜீப்வண்டி மீது போராளிகள் 'கிறனேட்' வீசி தாக்கிய பொழுது நான்கு பொலிசார் படுகாயமடைந்துள்ளனர். அச்சமயம் பின்னுல் மற்றொரு வாகனத்தில் வந்து கொண்டிருந்த பொலிசாருக்கும் போராளிகளுக்கு மிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ஜீப்சாரதி கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 9-45 மணி

(5-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

க பொ. த [உயர்தரப்] பரீட்சை இன்று நாடுமுழுவதிலுமுள்ள 758 பரீட்சை நிலையங்களில் ஆரம்பமாகிறது. இப்பரீட்சைக்கு ஒரு லட்சத்து இருபதினாயிரம் மாணவர்கள் தோற்றுகிறுர்கள்.

யாழ் மாவட்டத்தில் 63 பரீட்சை நிலையங்கள் உட்பட வடக்கில் 71 நிலையங்களில் எண்ணாயிரத்துக்கும் அதிக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகிறுர்கள் கிழக்கில் 41 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. [சி-எ]

யாழ். கோட்டையைச்சுற்றியுள்ள

## 'கட்டடங்கள் மூடப்பட்டுமக்கள் வெளியேற்றப்படவேண்டும்'

### படையினர் கோரிக்கை

கொழும்பு வியா

''யாழ் கோட்டையைச் சுற்றியுள்ள வீடுகள், கடைகள், காரியாலயங்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பான ஸ்தாபனங்கள் மூடப்பட்டு இக்கட்டடங்களிலுள்ள சகல மக்களும் வெளியேற்றப்படாவிடில் கோட்டையிலுள்ள படையினர் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள்'' என்று பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

படையினரின்இக்கோரிக்கை இவ்வாரம் நடைபெறும் பாதுகாப்பு படையின் உயரதிகாரிகள்பாதுகாப்புச்சபையின் கூட்டத்தில் ஆராயப்படுமெனத்

[5-ம் பக்கம் பார்க்க]

## தமிழர்விடுதலைக் கூட்டணி புதுடில்லி பயணம்

புதுடில்லி ஜுலை 31

இலங்கை பிரச்னைகுத்தீர்வு காணும் முகமாக இலங்கை அரசினுல் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரதிநிதிகள் குழு இன்று சென்னையிலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டது

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், தலைவர் திரு. மு சிவசிதம்பரம், பொலிட்பீரோ உறுப்பினர் திரு. ஆர். சம்பந்தன் ஆகியோர் இக்குழுவில் அடங்கியுள்ளார்கள்.

அண்மையில் கொழும்பில் இலங்கை அரசுடன் நடாத்திய பேச்சுக்கள் குறித்து இவர்கள் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ● பரீட்சையைகுழப்புவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'

### புலிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

''க பொ.த, உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவிருக்கிறது இப் பரீட்சையைக் குழப்ப முயல்வோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தமிழீழ விடுதலைப்புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

[5ம் பக்கம் பார்க்க]

## கைகள் கட்டப்பட்ட நிலையில் சூட்டுக்காயத்துடன்சடலங்கள்

(வவனியா நிருபர்)

வவனியாவில் இடம் பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினரால் விசாரணைக்கென கூட்டிச் செல்லப்பட்ட மூன்று பொது மக்கள் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுச்காயங்களுடன் கைகள் பின்னுல் கட்டப்பட்ட நிலையில் இறந்து கிடக்கக்காணப்பட்டனர்.

ஓயார் சின்னக்குளத்தை சேர்ந்த இராமையா ஆசைத்தம்பி (26 வயது), வீரையா விஜயபாலன் (20 வயது] ஒரு குழந்தைக்கு தந்தையான கதிரமலை சுப்பிரமணியம் (24 வயது) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்களாவர்

படுகொலை செய்யப்பட்ட மூவரும் அவர்களது வீடுகளிலிருந்து இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் சாஸ்திரி கூளாங்குளம் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவு முத்திரை விநியோகம்:

## யாழ். மாவட்டத்தில் அடுத்த வாரத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்டத்துக்கான உணவு முத்திரை விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பமாகும். இம்முறை ஒரு வருடத்துக்கான, அதாவது 1986 - யூன் மாதம் முதல் 1987 மே மாதம் வரையிலான காலத்துக்குரிய உணவு முத்திரைகள் வழங்கப்படும்.

முடிவடைந்த 1986 ம் ஆண்டு யூன், யூலை மாதங்களுக்குரிய முத்திரைகளை இம் மாதம் செலுத்தி மூன்று மாதங்களுக்குமுரிய உணவுப் பொருள்களை ஒரே முறையில் பெற்றுக் கொள்ள முடியுமா எனத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## நேரடி மோதலில் இராணுவத்தினர் பலர் பலி!

### ஈ பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், வெள்ளி

வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர்வெளியேவந்தபோதுதமது மக்கள்விடுதலைப் படையினர் எதிர்கொண்டு தாக்கியதில் 14க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக 'ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணிவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நேற்றுபகல் வசாவிளான் இராணுவமுகாமிலிருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் வெளியேறியபோது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையினர் கடுமையாகப் போராடி சிறீலங்காப்படை

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**FOR SALE**

Sri Lankan Legitimacy Over North and East by Somasundaram, Vanniasingham, Price Rs. 30/- at all Bookstalls
( C3785)

### விற்பனைக்கு

கூந்தலழகு மிளிர நாலு இயற்கை பொருட்களான சீயாக்காய், பச்சையரிசி, பயறு, வெந்தயம், சேர்ந்த 'சீயாக்காய் பவுடர்' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. 777, K K S. Road and 208, 1st Cross St, Jaffna T P. 22611. [C-3399]

### வகுப்புகள்

பௌதீகவியல் 87/88: ஆசிரியர்- N. பத்மநாதன், B. Sc. (Hons), 02-08-86 முதல் ''பொறியியலும் - நீர்நிலையியலும்'' நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், திருநெல்வேலி, (நேரசூசியை நிலையத்தில் பெறுக. விடுமுறைகாலத்தில் விசேட வகுப்புக்கள் நடாத்தப்படும் )-நிர்வாகி (C 3778)

Electronic Engineering, Radio and T. V (Antenna, Deck), வெல்டிங் வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகவுள்ளன சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கு விரைவில் Courses முடிக்கப்படும் Vispa Engineering Aid Hall, (ஆனைப்பந்திச் சந்திக்கருகாமையில்), 328, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [C 3759]

6ம் ஆண்டு தொடக்கம் 11ம் ஆண்டு வரை பிரதான பாடங்கள் கற்பிக்கப்படும். புதிய வகுப்பு ஆரம்பம் 01-08-1986 3 மணிக்கு. விபரங்கட்கு: Teacher Institute (செங்குந்தா இந்துக்கல்லூரிக்கு அருகாமையில், செங்குந்தா வீதி, கல்வியங்காடு. (C 3790)

108, Brown Road, AL/ 86 பொது இரசாயனம் பிரிவு II ஆரம்பம் 8-8 86 வெள்ளி 4-45 P m. ஆசிரியர் சத்தீஸ் (திங்கள், புதன், வெள்ளி 4-45 p. m.) C3791

தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம், கணக்கியல், S.T.C A, 1977ல் அரசினால் பதிவு செய்யப்பட்டது. திட்ட அமுலாக்கல் அமைச்சினால் மகளிர் தொழிற்கல்வி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. லண்டன் பிற்மன் பரீட்சைகள் நடைபெறும் நிலையம். 631, கே. கே. எஸ். வீதி (மனோகரா சந்தியிலிருந்து 100 யார்), யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் கிளைகள் இல்லை,
(C 3796)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## விஞ்ஞானபீடப் பரீட்சைகள்— 1986

விஞ்ஞானபீடப் பரீட்சைகள் யாவும் முன்னர் அறிவிக்கப்பட்டது போல 1986 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 1986 ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக யாழ் / பல்கலைக்கழக பரீட்சைக்கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். மேலதிக விபரங்களுக்கு விஞ்ஞான பீடாதிபதியையும், பரீட்சைக் கிளை சிரேட்ட உதவிப்பதிவாளரையும் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.

(A 983)

---

வல்வெட்டித்துறை நகரசபை

## முக்கிய அறிவித்தல்

இந் நகராட்சி மன்ற மின் விநியோக எல்லைக்குள் பல இடங்களில் களவாக மின்சாரம், மீற்றர் மூலமாகவும், வேறுவிதமாகவும் பாவனை செய்வதால் சபைக்கு பாரதூரமான நட்டம் ஏற்படுகிறது.

மின்சாரத் தொடுப்புக் கோருபவர்கள் விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலித்து துரித நடவடிக்கை எடுக்கப்பட்டாலும்கூட இவ்விதமாக களவாக மின் பாவனை செய்வதால் சபையின் மின்திட்டம் நட்டமேற்படுகிறதென்றால் வரியிறுப்பாளர்களாகிய உங்கட்கே பேரிழப்பாகும் சில இடங்களில் மீற்றர் சீல்கள் உடைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இத்தவறான செயல்களுக்கு உடந்தையாக மின்சாரததைப் பாவிக்க அனுமதிப்பவர்கள், பவிப்பவாகள் ஆகியஇருசாராரினதும் மின்சார விநியோகம் துண்டிக்கப்படுவதுடன், சட்டப்படியாக நஷ்டங்கள், தண்டங்கள் அறவிடப்படுமென எச்சரிக்கின்றேன்.

எனவே இந்நகர வரியிறுப்பாளர்கள், பிரஜைகள் குழுக்கள், ஏனைய பொதுஸ்தாபனங்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு சபைக்கு நட்டம்மேற்படுவதைத் தடுக்க உதவுமாறு அன்புடன் கேட்டுகொள்கின்றேன்.

க. சுப்பிரமணியம்,
செயலாளர்.

நகரசபை,
வல்வெட்டித்துறை.
31- 7- 86 [A 984]

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



ச. சிறீசர்வாநந்தா
உதயம்: 4-10-1963
அஸ்தமனம்: 19-6-1986

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் சொல்வாக்குப் பெற்ற, வல்வையம்பதியைப் பிறப்பிடமாகக்கொண்ட ச. சிறீசர்வாநந்தா (B Com) கடலைத் தளமாக்கி வீரசொர்க்கமடைந்த வேங்கை சேரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 2 -8- 86 அன்று நடக்கவிருப்பதால் அந்நேரம் உற்றார், உறவினர், நணபர்களை சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
தந்தை, தாய்,
சகோதரி,
சகோதரர்கள்,

சரவணமுத்து
சிறீசர்வாநநதா,
அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.
(திருவில்
வல்வெட்டித்துறை)
(C 3795)

---

செல்வி எஸ். அபிமன்னசிங்கம்,
சட்டத்தரணி,
சித்தாவத்தை,
உடுவில்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சுன்னாகம், சூராவத்தை ''ரட்ணவில்லா''வைச் சேர்ந்த ஐயாத்துரை சிவசம்பு என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

ஐயாத்துரை சிவசம்பு கைம்பெண் ஞானரத்தினம், ரட்ணவில்லா, சூராவத்தை, சுன்னாகம்.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. T/286

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு ஆவணி மாதம் 27-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

1986-ம் ஆண்டு ஆடி மாதம் 30-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. [C 3788]

---

## பகிஷ்கரிப்பு

பூநகரி, வியா

பூநகரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் இரண்டு வருடங்களுக்கு மேல் பொதுக் கூட்டத்தைக் கூட்டவில்லை என்ற காரணத்தினால் மட்டுவில்நாடு கிளையைச்சேர்ந்த சீவல்தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் மேற்படி கிளையில் கள் வழங்காது பகிஷ்கரித்து வருகிறார்கள்.

விரைவில் பொதுக்கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு பகிஷ்கரித்துவரும் சீவல் தொழிலாளர்கள் மேலிடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (இ)

---

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது!
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

---

## தசாஹ அறிவித்தல்



25-07-86 வெள்ளியன்று சிவபதம் எய்திய எமது அருமைத் தந்தை சிவஸ்ரீ கு. பஞ்சநதக்குருக்கள் அவர்களின் தசாஹ கிரியைகள் மாவிட்டபுரத்தில் 03-08-86 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்று கிரியைகளில் கலந்து கொள்ளும் படி வேண்டுகின்றோம்,

ப. பகேஸ்வரசர்மா, கா. தியாகராஜகுருக்கள்
(C 3786)

---

## BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3, Stanley Road, JAFFNA

### G. A. Q. 87
### பொருளியல்

S. வரதராஜன்

ஆரம்பம்: 2-8-86 சனி 1.30 p.m.

(முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்) (A 1016)

---

## இன்றே நாடுங்கள்

★ தரமான வர்ணபுகைப்படப் பிரதிகளை கம்பியூட்டர் முறையில் பிரதி பண்ணிக் கொள்வதற்கும் (பிரதி ரூ. 5/-)

★ வர்ணப் புகைப்படச் சுருள்களை (KODAK FUJI - SAKURA - TUDOR பெற்றுக் கொள்வதற்கும்

ஆண் பெண் இருபாலாருக்கும் ஏற்ற பெனியன்கள், ஜட்டிகள் பேபி சூட்டுகள், T சேட்டுகள் இவைகளை தரமான

வெலோனா (VELONA)

தயாரிப்புகளில் மொத்தமாகப் பெற்றுக் கொள்வதற்கும்!

## ஆர்த்தி ஜுவல்லர்ஸ் (Pvt.) லிமிட்டெட்

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
C 3730 தொலைபேசி: 2 3 6 2 8

---

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டட்

பாவித்த பழைய ரயர், ரியூப், மப்ளர், பாவித்து உடைந்த ஸ்பிறிங் பிளேட்டுக்கள்,

டாடா பென்சில் பாவித்து சழித்த PARTS சாமான்கள் விற்பனைக்கு விடப்படும் கிழமை நாட்களில் 9-00 மணி தொடக்கம் 5 00 மணி வரை பார்வையிடலாம்.

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டட்

82, கன்னுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
Phone: 2 4 3 1 0
[A 1018]

---

## தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த உதவியாளர்கள் (Helpers), குமிழர்கள் (Bubblers), ஆகியோரும் வெட்டும் பகுதி (Cutters) யில் கடமையாற்றக்கூடிய அனுபவமுள்ள பெண்களும் தேவை.

ஆகஸ்ட் 4ம், 9ம், திகதிகளில் காலை 9மணி முதல் பகல் 12 மணி வரை சான்றிதழ்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு சமூகம் கொடுக்கவும்.

தெரிவு செய்யப்படுவர்களுக்கு இலவச தங்குமிடமும் குறைந்த சலாரில் சாப்பாட்டு வசதிகளும் வழங்கப்படும்.

## த பெனின்சுலா குறூப்

மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை
இல. 9 கண்டி வீதி,
நாவற்குழி.
[A 1019]

### மணிவாக்கு

தனக்கெனக் கோரும் எல்லா உரிமைகளையும் எங்கே ஒருவன் ஏனைய அனைவருக்கும் கொடுக்கின்றானோ அங்கேதான் உண்மையான நாகரிகம் இருக்கின்றது.

— ரொபேர்ட் ஜி இங்கர்சால்.

## நமதுநோக்கு

# சோவியத் துருப்புகள் வெளியேறும் விவகாரம்

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள சோவியத் துருப்புக்களில் ஆறு பிரிவுகளை வருடமுடிவுக்குள் திருப்பி அழைத்துக்கொள்ளப்போவதாக சோவியத் தலைவர் திரு. மிக்கேல் கொர்பச்சேவ் அறிவித்திருப்பது மேற்குலகில் அதிக உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை

ஜெனிவாவில் பாகிஸ்தானுக்கும் — ஆப்கானிஸ்தானுக்குமிடையில் ஐ நா. ஆதரவில் நடந்த புதனன்று உத்தியோகப்பற்றற்ற முறையில் ஆப்கன் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருந்த வேளையில் சோவியத் தலைவரின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

1978ம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியை அடுத்து மாஸ்கோ சார்பு அரசு ஒன்று ஆப்கானிஸ்தானில் பதவி ஏற்றது. ஆனல் மூன்று மாதமே பதவியில் இருந்த இந்த அரசும் கவிழ்க்கப்பட்டு இன்னும் தீவிர சோவியத் சார்பு அரசு பதவியைக் கையேற்றது. இதையடுத்து உள்நாட்டில் பலத்த எதிர்ப்புகளும், கிளர்ச்சிகளும் ஏற்பட்டமையால் 1979ம் ஆண்டில் சோவியத் படைகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டன. தற்பொழுது சுமார் 118,000 சோவியத் துருப்புகள் அங்கிருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் உருவாகிய இந்த நிலைமையால் அண்டை நாடான பாகிஸ்தானுக்குள் பெரும் எண்ணிக்கையில் அகதிகள் புகுந்துள்ளார்கள். சோவியத் துருப்புக்களின் ஆதரவுடன் செயல்படும் காபுல் படைகளை கிளர்ச்சியாளர்கள் வன்மையாக எதிர்த்துவருகின்றார்கள் இவர்களுக்கு பாகிஸ்தானிலிருந்து ஆயுதம் மற்றும் தளபாட உதவிகள் கிடைத்துவருவதாகக கூறப்படுகின்றது

மேலும் ஆப்கானிஸ்தானில் சோவியத்படைகள் இருப்பதை பாகிஸ்தான் வன்மையாக எதிர்த்துவருவது ஒருபுறமிருக்க, அதனல் தனது சொந்தநலன்கள் பலவகையிலும் பாதித்துவருவதாகவும் குற்றஞ்சாட்டி வருகின்றது. ஆப்கான் . கிளர்சியாளர்களுக்கு பாகிஸ்தான் உதவுகின்றது என்ற பின்னணியில் அந்த நாட்டின் மீதும் சோவியத் தாக்குதல் ஏற்படலாம் என்ற அச்சம் மேலோங்கியுள்ளது இந்த நிலைமையைப் பயன்படுத்தி அமெரிக்கா விடமிருந்து நவீனரக ஆயுதங்கள் பலவற்றையும் பாகிஸ்தான் இறக்குமதிசெய்து வருகின்றது

பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வந்து சேர்வது தனது நலன்களைப் பெரிதும் பாதிக்கும் என இந்தியா அச்சம் கொண்டுள்ளது. இதனல் பாரதம் தன் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது இன்னும், பாகிஸ்தானுக்கு புதியரக ஆயுதங்கள் வந்து சேர்வதால், அது தன் பழையரக ராணுவ தளபாடங்களை நன்கொடையாக, அல்லது குறைந்த விலையில் இலங்கை போன்ற நாடுகளுக்கு கொடுத்துதவும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே ஆப்கான் பிரச்னையால் அண்டை நாடுகள் பலவும் சிக்கலுக்குள்ளாகியிருக்கும் இவ்வேளையில் திரு. கோபர்ச்சேவின் மேற்படி அறிவிப்பு இங்கு நிலைமையைச் சற்றுகிலும் தணிய வைக்குமானல் வரவேற்கக்கூடியதே

ஆனல் இது வெறும் ராஜதந்திர நடவடிக்கையென்றே விமர்சகர்கள் கருதுகிறார்கள். துருப்புகள் இடத்துக்கிடம் சுற்றுவட்டமாக மாற்றப்படுவது பொதுவாக நடந்துவரும் காரியம்தான் என அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

ஆப்கான் விவகாரத்தை அந்த நாட்டு மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். அதில் நேரடியாகவோ. மறைமுகமாகவோ வெளியார் தலையீடு இருக்கலாகாதென்பது பொதுநோக்கர்களின் கருத்து.

அமெரிக்க - சோவியத் உச்சி மகாநாட்டுக்கான தீவிர முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் ஆப்கானிஸ்தானில் சுமுகமான அரசியல் தீர்வொன்றுக்கு வழிவிட்டு சோவியத் யூனியன் தனது துருப்புக்களை வாபஸ் பெறுமானல் அமெரிக்காவின் மறைமுகமான தலையீடுகள் குறையவும் இப்பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகள் தீரவும் உதவக்கூடும்.

ஜெனிவாவில் இப்போது நடைபெறும் பேச்சுக்கள் இதற்கு வழிவகுக்குமா?

# இன்று 170 வது ஆண்டு நிறைவுகாணும் வேம்படி உவெஸ்லியன் பாடசாலை

கிறிஸ்துவின் நற்போதனைகளைக் கிழக்குலகிற்கு எடுத்துச் சொல்ல முற்பட்ட உவெஸ்லியன் சபையார் டாக்டர் தோமஸ் குக் தலைமையில் இங்கிலாந்திலிருந்து 1813ம் ஆண்டு கப்பலிற் புறப்பட்டனர். தலைவர் உட்பட இருவர் இறையடி சேர, ஏனைய ஐவரும் பம்பாய் வழியாகக் காலித் துறையை வந்தடைந்தனர். இவர்களில் ஜேம்ஸ் லிஞ்ச், தோமஸ் ஸ்குவான்ஸ் இருவரும் வடதிசை போவதென்த் திருவுளச் சீட்டினல் தீர்மானித்து 1814-8-10 அன்று யாழ்ப்பாணம் வந்தடைந்தார்கள். இவர்களுக்கு அந்நாளில் உதவிக் கலெக்டராக இருந்த ஜேம்ஸ் மூயாட் உணவு, உறையுள் கொடுத்து ஆதரித்தார்

சமய அறிவைப் புகட்ட வித்தியாசாலை அத்தியாவசியம் என லிஞ்ச் பாதிரியார் கருதினர். இவருடன் ஆட்சியாளரின் கல்வியதிகாரியான கிறிஸ்ரியன் டேவிட்டும் சேர்ந்து கொண்டார். ஆகவே உடனடியாகப் பாடசாலையொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று முடிவாயிற்று ஆயினும், வசிப்பிடமாகவும், பாடசாலையாகவும் அமையக்கூடிய ஒரு பெரிய கட்டிடம் உடனடியாகக் கிடைக்கவில்லை. ஆகவே முறைசாராக் கல்வி ஆரம்பமாகியது. இரண்டு வருடங்கள் கழிந்தன.

அந்நாளில் யாழ்ப்பாணப் பட்டினம் ஒரு மிகச் சிறிய இடமாக, இன்றுள்ள முன்தெருவுக்கும் மூன்றாம் குறுக்குத் தெருவுக்கும் இடைப்பட்டு, தேவாலய வீதியிலிருந்து கடற்கரை வரையுள்ள இடப்பரப்பை உள்ளடக்கியதாக இருந்தது இவ்விடத்தில் இன்று யாழ். மத்திய கல்லூரியின் பிரதான மண்டபக் கட்டடம் இருக்கும் இடத்தில் ஒல்லாந்தர் தேவாலயமொன்று கடற்கரையை நோக்கியவண்ணம் இருந்தது. இக்கட்டடம் அரச ஏலத்தில் விடப்பட்டபோது லிஞ்ச் பாதிரியார் இதனைக் கொள்முதல்செய்து உவெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையைத் தனது முதலாவது நிலவுடைமைக்கு 1-8-1817ல் உரித்தாக்கினர். அன்று ஸ்தாபிக்கப்பட்ட ''லிஞ்ச் பாடசாலை'' தொடர்ந்து இயங்கி இன்று 170 ஆண்டுகள் நிறைவுற்ற யாழ். மத்திய கல்லூரியாக விளங்கின்றது.

உவெஸ்லியன் சபையாரைத் தொடர்ந்து அமெரிக்க மிஷனரிகளான எட்வேட் வரன், டாக்டர் டானியல் பூவர் ஆகியோர் 15-10-1816ல் தெல்லிப்பளையைச் சென்றடைந்து இன்றைய யூனியன் கல்லூரி வளாகத்தைத் தமது சமய, கல்விப் பணிகளின் நிலையமாக்கிக் கொண்டனர். இதனல் யூனியன் வளாகக் கல்லூரி யாழ். குடாநாட்டின் இரண்டாவது பழம்பெரும் பாடசாலையாகக் கருதப்படுகிறது.

லிஞ்ச் பாதிரியார் ஸ்தாபித்த யாழ். ஆங்கிலப் பாடசாலைக் கட்டடத்தில் இடம்பெற்றிருந்த தேவாலயம் வழிபாட்டுக்குப் போதாமையால் 1820ல் சபைத் தலைவராயிருந்த ரொபேட் காவர் தேவாலய வீதியின் எதிர்ப் பக்கத்திலிருந்த நிலத்தைக் கொள்வனவு செய்து அவ்விடத்தில் தேவாலயமொன்றைக் கட்டுவித்து 1823ம ஆண்டில் பாடசாலைக் கட்டடத்தைத் தனிமைப்படுத்தினர். இந்நாளில் யாழ். ஆங்கிலப் பாடசாலையின் உபயோகத்திற்காக வேறு கட்டடம் எதும் இவ்விடத்தில் இருக்கவில்லை.

### முற்றவெளியில் இருந்த கட்டடங்கள்

யாழ் முற்றவெளியைச் சூழ்ந்திருந்த நிலப்பரப்பில் முதிர்ந்த வேப்பமரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. இம்மரங்களின் பின்னல் ஒல்லாந்தர் தளபதி வசித்த பாரிய சட்டடமொன்றும், அதையடுத்து தொடர் அறைகளைக்கொண்ட மற்றுமொரு பாரிய சட்டடமும், ஓர் இல்லமும் இருந்தன. 14-7-1817ல் ஏலமிடப்பட்ட இக்கட்டடத் தொகுதியை ஜேம்ஸ் மூயாட் கொள்வனவு செய்து ஏழு வருடங்களின் பின் உவெஸ்லியன் சபைக்குக் கையளித்தார். இன்று இக்கட்டடங்கள் றிம்மர் மண்டபமாகவும், வேம்படி மகளிர் உயர்நிலைப் பாடசாலையாகவும் திகழ்கின்றன பழைய தேவாலயக் கட்டடத்திலிருந்த யாழ். ஆங்கிலப் பாடசாலை, சைவத் தமிழுலகில் தோன்றவிருக்கும் விடிவெள்ளியின் முன்னேடியாக வேம்படியின் இப்பாரிய கட்டடத் தொகுதிக்கு 1825ம் ஆண்டில் மாற்றப்பட்டது.

### புதிய அத்தியாயம்

சமயக் கல்விக்கு வித்தியாசாலையின் பங்களிப்பைக் கல்கத்தாவில் டாக்டர் டவ் அவர்களிடம் கண்டறிந்த வணக்கத்திற்குரிய பீற்றர் பேர்சிவல் சபைத் தலைவராக 1834ம்ஆண்டில் நியமிக்கப்பட்டார் யாழ்ப்பாணத்தின் வரலாற்றிலே புதிய அத்தியாயமொன்று ஆரம்பமானது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பேசுகிறார்:-

### நாவலர் ஆங்கிலம் கற்ற இடம்

''நான் ஐய வருஷம் முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் சற்றேன் பிலவ வருஷம் பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனுயினன்.''

ஆறுமுகவராயிருந்த ஆறுமுக நவலர் இவ்வித்தியாசாலையிலே ஆங்கிலம் கற்றதும், பின்னர் கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலத்துடன் மேல் வகுப்புகளுக்குத் தமிழும் படிப்பித்ததோடு, தனது ஆசானுக்கே தமிழாசானுகி பின்னர் பேர்சிவல் முதலிய பாதிரிமார் மொழிபெயர்த்த கிறிஸ்தவ வேதாகமத்தின் தமிழ் உரைநடையை இலக்கண இலக்கிய வழுவற்ற நூலாக்கியமையும் சிறப்புக்கும் வியப்புக்கும் உரியன இத்தகைய பெருஞ் சிறப்புக்களைப்பெற்ற வித்தியாசாலைகள் அழியாப் புகழுடையனவாகின்றன

யாழ். மத்திய கல்லூரிக்கே உரித்தான இப்புகழை வேம்படிப் பாடசாலை உருப்படியாகத் தட்டிக்கொண்டுவிட்டது மறுக்கமுடியாத உண்மையாகும். பேர்சிவல் பாடசாலையில் நாவலர் ஆங்கிலக் கல்வி கற்றது வேம்படி வளாகத்தில். நாவலர் தமிழ் கற்பித்த அறைத் தொகுதி இன்றும் வேம்படிப் பெண்கள் பாடசாலையின் வகுப்பறைகளாயிருக்கின்றன. பேர்சிவல் பாடவிதானத்தை விரிவாக்கி யாழ். ஆங்கிலப் பாடசாலையை ''யாழ். மத்திய பாடசாலை'' யாக்கி நடத்தியதும் வேம்படி வளாகத்திலேயே. பேர்சிவல் துரையின் மதிப்பிற்குரிய ஆறுமுக நாவலர் பாதிரிமாருடன் சமமாக உரையாடி கிறிஸ்தவ வேதாகம மொழிபெயர்ப்பில் ஈடுபட்டதும் வேம்படி வளாகத்தை யொட்டிய மிஷன் நூலகத்தில். இக்கட்டடத் தொகுதியின் அடித்தளம் தொல்பொருளாக இருப்பதும் இவ்வளாகத்திலேயே. பதினன்கு ஆண்டுகளாக ஆறுமுக நாவலர் பாதம்படிந்து. நடந்து திரிந்து சைவத் தமிழ் வளர்த்ததும் வேம்படியிலேயே.

ஆகவே ஆறுமுக நாவலர் வேம்படி வளாகத்துக்கே உரியவராயிருந்தபோதிலும், அவர் சேர்ந்த பாடசாலை 'யாழ் மத்திய பாடசாலை' என்பதால் யாழ். மத்திய கல்லூரியும் நாவலரை உரிமைகோர உரித்துடையது. 1837ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட 'வேம்படி பெண்கள் பாடசாலை' யும் நாவலர் அங்கு படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே உருவானது.

— கா. மாணிக்கவாசகர் —

## தென்மராட்சியில்
# இந்து அறங்காவல் சபை அமைக்க முயற்சி

சாவகச்சேரி, வியா

தென்மராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற சகல இந்து ஆலயத் தர்மகர்த்தாக்களையும் இணைத்து தென்மராட்சி இந்து அறங்காவலர் சபை ஒன்றினை நிறுவ ஆத்மஜோதி திரு நா. முத்தையா தலைமையில், தென்மராட்சியில் இருக்கின்ற சைவப் பெரியார்கள் தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

இந்து ஆலயங்களை நல்ல முறையில் செயற்படச்செய்யவும், இந்துமதக்கல்வியை ஆலயச் சுற்றாடல்களில் மேலும் விரிவுபடுத்தவும், இந்து ஆலயங்களில் நடைபெறுகின்ற உற்சவங்கள். திருத்தொண்டுகளை மென்மேலும் ஊக்குவிக்கவும், இந்து ஆலயங்கள் மத்தியில் நிலவுகின்ற முரண்பாடுகளை நீக்கவும, உருவாக்கப்படவிருக்கும் 'தென்மராட்சி இந்து அறங்காவலர்சபை' பணியாற்றும்எனவும் தெரியவந்துள்ளது

ஆத்மஜோதி திரு நா. முத்தையா தலைமையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தல யாத்திரை நிகழ்ச்சியில் பங்குகொண்ட சைவப் பெரியார்கள் பலர் அவ்வப் பகுதிகளில் இயங்குகின்ற ஆலயங்கள் பற்றி மேற்கொண்ட ஆய்வினை அடுத்தே, இவ்வாறன ஒரு அமைப்பின் அவசியம் பற்றிப் புரிந்து கொண்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (இ)

# நல்லூர் உற்சவ தொண்டர் சேவை

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத் தொண்டர் சேவையை இம்முறை வழமையைவிட விரிவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் மன்றங்களின் தொண்டர் பிரிவுகளுக்கு இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று பேரவையினல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவத்தில், 25 தினங்களும் இந்து இளைஞர் தொண்டர்களது பணிகள் பற்றியும், சேவை ஒழுங்குகள் பற்றியும் ஆராய்வதற்கான விசேஷ கூட்டமொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

[மண். நிரு-எ]

## தையல்நாயகி திருப்பள்ளிஎழுச்சி

சந்ததமும் நின்னவாம் தாளிணைகள் தொழுவோர்
தங்குறைகள் தீர்க்கின்ற தையல்நாயகியே!
ஐந்தினுடன் இரண்டாய உலகுதனை ஈன்ற
அருட் செல்வீ சங்கரீ அவனிதொழுதேவீ!
பைந்தமிழை வளர்க்கவென்று சங்கமிருந்திட்ட
பாலகனும் திருமுருகன் தனைப் பயந்ததாயே!
செந்தமிழர் இடர்அனைத்தும் சொல்லி அழுகின்றோம்
திரிபுரத்துச் சுந்தரியே பள்ளி எழுந்தருளாய்

ம. பார்வதிநாதசிவம்.

இன்று வண்ணை தையல்நாயகி அம்பாள் மூன்றாம் திருவிழா பகல் மஞ்சம், இரவு அன்னவாகனம்.

## கடை உடைத்து கொள்ளை

வவனியா, புதன் வவனியா கண்டி வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் பின்பக்கக் கதவை உடைத்துத் திறந்த இனந் தெரியாதோர் அறையிலிருந்து இயந்திர உதிரிப்பாகங்களையும் ஐயாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துசென்றுள்ளனர். இச்சம்பவம்நேற்றிரவு நடைபெற்றது.

சம்பவம் நடைபெற்ற சமயம் கடையில் யாரும் இருக்கவில்லை கதவுடைக்கும் சத்தம் கேட்டு வந்திருந்த நகரப் பாதுகாப்பு உத்தியோகத்தரை நோக்கி கொள்ளையடிக்க வந்தவர்கள் சத்தம் போட்டால் துப்பாக்கியால் சுடுவோம் என சிச்களத்தில் பயமுறுத்திவிட்டுகொள்ளையை நடத்தியுள்ளனர். [ஊ]

## 'கறுப்புச்சட்டைக்காரரர்'மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி. வவனியா முகாம்லிருந்து ரோந்து சென்ற கறுப்புச் சட்டைக்காரரர் மீது பல இடங்களில் வைத்து தமது இயக்கப் போராளிகளால் தாக்குதல் நடத்தியதாகவும் இத்தாக்குதல் சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டதாகவும் பலர்காயமடைந்தாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நேற்று முன்தினம் காலை வவனியா முகாமிலிருந்து வந்த 200க்கும் மேற்பட்ட கறுப்புச் சட்டைக்காரரர்கள் விளாத்திக் குளத்தை முற்றுகையிட்டனர். இம் முற்றுகையை அறிந்துவர எமது போராளியான நிருபன் சென்றபோது வழியில் மக்கள் சிலர் இவரிடம் ''கறுப்புச் சட்டைக்காரர்கள் இரண்டு பொது மக்களைப் பிடித்துக் கொண்டு இலுப்பங்குளம் போயுள்ளனர்'' என்று கூற இவர் இலுப்பங்குளம் நகர்ந்து சென்ற போது காக்கையன் குளம் பாடசாலைக்கு அண்மையில் குளத்துவானில் வைத்து நண்பகல் 12 மணியளவில் கறுப்புச் சட்டைக்காரரினால் சுடப்பட்டுள்ளார். இவரது உடல் எம்மவர்களால் பின்னர் மீட்கப்பட்டது.

''பின்னர் கறுப்புச்சட்டைக்காரர் காங்கேயன் குளத்திலிருந்து கல்மடு வழியாக திரும்பும் போது பிற்பகல் 1-30 மணியளவில் சிலிண்டர் தாக்குதலும் கிரனேட் தாக்குதலும் நிகழ்த்தியதில் பல கறுப்புப் சட்டைக்காரர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளானுர்கள், மீண்டும் திரும்பிச் சென்ற கறுப்புச் சட்டைக்காரர் மீது ஈச்சங்குளம் என்னுமிடத்தில் வைத்து எம்மவர்கள். தாக்கினர். அச்சமயம் இடம் பெற்ற நேரடிமோதல் தொடுத்தபோது மேலும் கறுப்புச் சட்டைக்காரர்கள் பலத்த காயங்களுக் குள்ளானுர்கள். இச்சம்பவத்தின்போது எமது தரப்பில் ஒருவர் சிறுகாயங்களுக்குள்ளானுர்.

''அங்கிருந்து மீண்டும்திரும்பிய கறுப்புச்சட்டைக்காரர் மீது இதேபகுதியில் வைத்து தரைக்கண்ணி வெடித்தாக்குதல் நிகழ்த்தியதில் கறுப்புச் சட்டைக்காரருள் பாரியஉயிர் இழப்புகளும் காயங்களும் ஏற்பட்டன.

''இத்தாக்குதலின் போது கறுப்புச்சட்டைக் காரர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் முகிலன் வீரமரணமானுர். கறுப்புச்சட்டைக்காரர் பாரிய இழப்புகளுடன் பின்வாங்கினர், இச்சம்பவங்களில்எமது தரப்பில் வேறுஎவ்வித இழப்புகளும் இல்லை:

''அம்மண்ணின் விடிவுக்காக மரணித்த இரண்டாவது லெப்டினண்ட் நிருபன் [பொ. கலாநிதி, பாவற்குளம்] முகிலன்) கு. கணேசலிங்கம், பாவற்குளம்) ஆகியோருக்கு எமது வீரவணக்கத்தைதெரிவிக்கிறேம் '[மா]

## உணவு முத்திரை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுக்கும் முத்திரைகள் அனுப்பி வைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றது சில உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளுக்கு ஏற்கனவே முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டன. இன்னும் இரு தினங்களில் சகல உ. அ அதிபர் பிரிவுகளுக்கும் முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுவிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை மண்ணெண்ணை முத்திரை உட்பட ஐந்து லட்சம் முத்திரைகள் யாழ். மாவட்டத்தில் விநியோகிக்கப்படும் எனத் தெரிகிறது.

கொழும்பில் இருந்து பகுதி. பகுதியாக உணவு முத்திரைகள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட போதிலும் தற்போது சகல உணவு முத்திரைகளும் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளதாகத் தெரிகிறது. (ச)

## நேரடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை தாக்கினர்.

''மக்கள் விடுதலைப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதில் நாலு இராணுவத்தினரும், S S-85ரக மோட்டார் தாக்குதலில் 10ற்குமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்பலர் காயமடைந்தனர்

''கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடலங்களை ஹெலிகொப்டர்களில் வந்த இராணுவத்தினர் மீட்டுச்சென்றனர்.

''மீண்டும் 2 மணியளவில் இராணுவத்தினர் வெளியேறியபோது வீரமுடன்போராடிய மக்கள் விடுதலைப்படைத் தோழர் பவன் [அந்தோனிதாஸ் திருகோணமலை] வீரமரணமடைந்தார். தோழர் பவனின் சடலத்தை மக்கள் விடுதலைப்படையினர் மீட்டு இராணுவ மரியாதையுடன் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்தனர்''. [மா]

## போராளிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பமும் வழங்கவேண்டும் இவ்வாறு செயல்படும் போது இலகுவாக இனப் பிரச்னையைத் தீர்கலாம் என்றும் திரு தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்டவிஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்ற திரு எஸ். தொண்டமான் நேற்றுக்காலை இலங்கை வந்துசேர்ந்தார். [ஏ-கூ]

## 'பேர்ஸ்' யாருடையது?

யாழ்ப்பாணம், வெள். நேற்று முன்தினம் யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்ட மினி பஸ்' ஒன்றிலிருந்து கைவிடப்பட்ட நிலையில் 'பேர்ஸ்' ஒன்று கண்டெடுக்கப்பட்டு லங்கா சிமெந்து தொழிற்சாலையில் இயந்திரப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (எ)

## புதிய அமைப்பு

யாழ்ப்பாணம், வெள். சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவும் தம்மைத் தாம் பாதுகாக்கவும் புதிய அமைப்பு ஒன்றுஉருவாக்கப்பட்டுள்ளது.

டாக்டர் நாத் அமரக்கோன் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வமைப்பில் வண மாதுளுவாவேசோபிததேரோ அத்தனகல பா. உ லக்ஷ்மன் ஜெயக்கொடி, மஹரகம பா. உ. தினேஷ் குணவர்த்தன. விமலேந்திர- ஆரியதேவ ஆகியோர் அங்கம் வசிக்கிறூர்கள். [ச-இ]


மின் தடை

இலங்கை மின்சார சபையின்

முக்கிய அறிவித்தல்

1986-08-03 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை சுன்னுகத்தில் அமைந்திருக்கும் பாரிய உப-மின் நிலையத்தில் அவசர திருத்த வேலை காரணமாக சுன்னுகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய மின் அத்தியட்சகர்களின் பகுதிகளுக்கும், யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பல உப மின் நிலையங்களுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படும் என சகல மின்பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு!

மின் பொறியியலாளர்,
யாழ்.பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.

(A 985)



முதலாம் ஆண்டு நிறைவு அஞ்சலி



திருமதி
பொன்னம்மா
இராசேந்திரம்
(அன்னம் ஆசிரியை)
(வேலணை கிழக்கு-பெருங்குளம் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

மலர்வு: 04-09-1916
உதிர்வு: 12-08-1985

உற்ருர், உறவினர், அயலார், அனைவரும் மெச்ச நடந்து எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் உயர் வாழ்விற்கு வழிகாட்டியாய் அன்பிற்கும் பண்பிற்கும் பிறப்பிடமாய் விளங்கிய அன்புத்தெய்வமே! ஓராண்டு காலமாகியும் உங்களின் நினைப்பு எங்களைவிட்டு நீங்கவில்லை நின் துயரம் போகவில்லை. எல்லார் தமக்கும் இனிதே விளைச்து எம்மை விட்டுப்பிரிந்து போன உங்களின்ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி அஞ்சலி செய்கின்றேம்

அன்னுரின் குடும்பத்தினர்.

கட்டப்பிராய்,
கல்வியங்காடு.
01-08-86. C-3808



வின்ஸர்
திரை அரங்கில்
10-30 2-30, 6-30
சுதாகர், ரதி, ராதிகா, விஜயன்
நடித்த,
நிறம் மாருத பூக்கள்
அநேக மாதர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யும் முகமாக அதிக வசூலைக் கொடுத்த அற்புதமான காதலோவியம். இதுவே கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகின்றது. புதிய பிரதி.

வின்ஸர் மினி திரையில்
முரளி, புதுமுகம் சந்திரா, ஆஷாலதா,
டில்லி கணேஷ் நடித்த
புதிர்

லிடோ
காலை 10-30, 2-30, 6-30
பாண்டியன்—ரேவதி
நடித்த
புதுமைப் பெண்
[புதிய பிரதி கலர்]

வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனு வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.



நியூ விக்ரேஸ்

புதிய வீடியோ பட வெளியீடுகள்

1. மனிதனின் மறுபக்கம்
சிவகுமார், ராதா, ஜெயஸ்ரீ
2. கைதியின் வேட்டை (மாஸ்ரர்)
விஷ்னுவர்தன், சுதர்ஸன், பவித்திரா
3. சாம் பியன்
சிரஞ்சீவி, பூர்ணிமா, பாக்கியராஜ், துளசி
4. புதிர்
முரளி. சந்திரா
5. சம்சாரம் அது மின்சாரம்
சந்திரசேகர், விசு, கிஷ்மு, லஷ்மி
6. எனக்கு நானே நீதிபதி
விஜயகாந், நளினி
7. காட்டுக்குள்ளே திருவிழா (மாஸ்ரர்)

நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532
[A 1023]



எமது புதிய வெளியீடுகள்

1. மனிதனின் மறுபக்கம் (CAMERA COPY)
2. கடலோரக் கவிதைகள் (V. G P. MASTER)
3. சம்பியன் (CAMERA COPY)
4. கைதியின் வேட்டை (SUHAN MASTER)
5. புதிர் (CAMERA COPY)

RECORDING ஓடர்கள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுவதுடன் கட்டணங்களில் விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
C 3802 தொலைபேசி: 23665



88 III-ம் பிரிவு

A/L வகுப்புக்கள் ஆரம்பம்
02-08-1986 சனி காலை 9-30மணி

| | | | | |
|---|---|---|---|---|
| PHYSICS | — | 9-30 | - | 10-30 |
| CHEMISTRY | — | 10-30 | - | 11-30 |
| ZOOLOGY | — | 11-30 | - | 12-30 |
| BOTANY | — | 12-30 | - | 01-30 |
| PURE and APPLIED MATHS | — | 11-30 | - | 01-30 |

விபரங்கட்கு:-
NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.
[A-1007]

### பாடசாலை உதைபந்தாட்டம்:

## ஒஸ்மானியா — மகாஜனா இறுதி ஆட்டத்தில் மோதும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். கல்வி இலாகாவினால் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக் அவுட்' போட்டியின் 19 வயதுப் பிரிவின் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது

மேற்படி பிரிவின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் மோதுகின்றன.

இப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 4மணிக்கு நடைபெறும்.

### ஒஸ்மானியா வெற்றி

ஒஸ்மானியாக் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு மிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் ஒஸ்மானியாக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும்வரை ஒஸ்மானியாவின் கோஷ்டியே சிறப்பாகவும் வேகமாகவும் விளையாடியது. இடைவேளையின்போது ஒஸ்மானியா 4—0 கோல்களால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின்பும் ஒஸ்மானியா மேலும் நான்கு கோல்களைப் போட்டு 8—0 கோல்களால் வெற்றிபெற்றது.

ஒஸ்மானியாக் கோஷ்டியின் சார்பில் முகைமின், நவாஸ், நசூர் ஆகியோர் 3, 2, 2 கோல்களைப் போட்டனர்.

இப்போட்டிக்கு ஆர். மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார். [வி]

## செவ்விளநீர் கன்றுகள்

பண்டத்தரிப்பு, வியாழன்

விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று வருடத்தில் காய்க்க கூடிய நல்ல இன செவ்விள நீர் தென்னம் கன்றுகள் பண்டத்தரிப்பு நாற்று மேடையிலிருந்து சகாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு வை. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

சுமார் ஆயிரம் செவ்விள நீர் தென்னம் கன்றுகள் நாற்று மேடையில் இருப்பதாகவும் தலா ஏழு ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் வீட்டு வளவுகளில் நாட்டி நல்ல பயனை பெற முடியும், என்றும் இவற்றை திரு. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

## 7வாரங்களுக்கு முன் இறந்த பெண்ணுக்கு மகப்பேறு!

### செயற்கை உயிரூட்டல் மூலம் சாதனை

லாஸ்ஏஞ்சல்ஸ், ஜூலை. 31

ஏழு வாரங்களுக்கு முன்னர் உயிரிழந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் பெண் சிசுவொன்றை பிரசவித்துள்ளார்.

இம் மருத்துவ அதிசயம் நேற்று கலிபோர்ணியாவில் உள்ள வைத்தியசாலையொன்றில் இடம்பெற்றது.

கொஸ்மேரி என்ற 35 வயதான கர்ப்பிணிப் பெண் ஒருவர் தலைக்குள் ஏற்பட்ட வீக்கம்ஒன்று காரணமாக மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இறுதியில் அவர் ஏழு வாரங்களுக்கு முன்னர் அத்தலை வியாதி காரணமாக உயிரிழந்தார். ஆயினும் அவர் கர்ப்பமுற்றிருந்ததால் அவரது வயிற்றிலிருந்த சிசுவை உயிருடன் வெளியே எடுப்பதில் டாக்டர்கள் ஆர்வம் காட்டினர்.

இறந்த அப்பெண்ணின் வயிற்றிலிருந்த சிசுவுக்கு செயற்கை முறையில் அப் பெண்ணினூடாக 'கருப்பை'ச் சூழலில் உயிரோட்டத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

தொடர்ந்து பிரசவவேளை ஏற்பட்டதும் சத்திர சிகிச்சை மூலமாக அப்பெண் சிசு உயிருடன் வயிற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது இச்சிசுவின் நிறை 4 றாத்தல் 5 அவுன்ஸ் எனத் தெரிவிக்கப்பட்டது.

இறந்த அப்பெண் திருமணமாகாதவர். அவரது காதலன் மூலமாகவே கர்ப்பமடைந்தார். இதன் காரணமாகவே அவர் இறந்த பின்னர் செயற்கை முறையில் அவருக்கு உயிரூட்டுவதை அவரது பெற்ரோர் அனுமதிக்கவில்லை

ஆயினும் அப்பெண்ணின் காதலன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரமே செயற்கை உயிரூட்டலின் மூலம் இறந்த தமது காதலி மூலம் தமது குழந்தையை பிரசவிக்கச் செய்தார்.

### சாவகச்சேரி நகராட்சிமன்ற

## முதலாவது கிளை நூலகம் நுணுவிலில் நிறுவப்படும்

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முதலாவது கிளைநூலகம் நுணுவிலில் மேற்கில் அமைக்கப்படவுள்ளது.

இந்நூலகக் கட்டிடத்தினை அமைப்பதற்கும், நூல்கள் கொள்வனவுக்குமென நகராட்சி மன்றம் மூன்றரை லட்சம் ரூபாவை செலவுசெய்யவுள்ளது.

நுணுவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலயத்தினரின் நீண்டநாள் கோரிக்கை மிக விரைவில் நிறைவேற்றப்படவிருக்கின்றது. இக்கட்டிடத்தினை அமைப்பதற்குரிய காணியினை நுணுவில் மேற்கைச் சேர்ந்த முன்னாள் நகரசபை உறுப்பினர் திரு. எஸ். சதாசிவம் அன்பளிப்பாக வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளதாக நகராட்சி மன்றத்தின் செயலாளர் திரு. த. நவரத்தினராசா தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத்துக்கான வரைபடமும் அங்கீகாரமும் நாடு நகர அபிவிருத்திச் சபையிடமிருந்து கிடைத்துள்ளதாகவும் இந்த மாதத்தில் இக்கட்டிடத்துக்கான ஒப்பந்த வேலைகளை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### உபமின்நிலயம்

## அமைக்க ஏற்பாடு

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை துர்காபுரம் மற்றும் அதையடுத்துள்ள பகுதிகளுக்கு மேலும் கூடுதலாக மின்சாரம் வழங்கும் நோக்குடன் தெல்லிப்பழை 8ம் கட்டையில் புதிய உபமின்நிலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த உபமின் நிலயத்தை அமைக்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் அமையும் இந்த உபமின் நிலயம், தெல்லிப்பழை துர்க்காபுரம், 8ம் கட்டை மற்றும் அதையடுத்துள்ள பகுதிகளுக்கு மேலும் கூடுதலாக மின்சாரத்தை வழங்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. [எ]

## கட்டுரை போட்டி

சாவகச்சேரி, வியாழன்

சர்வதேச சமாதான ஆண்டினை முன்னிட்டு சர்வதேச ஐக்கியபாடசாலைகள் நிறுவனம் ஓர் கட்டுரை போட்டியினை நடாத்துகின்றது.

இக்கட்டுரைப் போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் 13-16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மேலதிக விபரங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவுடன் தொடர்பு கொள்ளலாம். (இ)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தவிர்க்கமுடியாத காரணங்களால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த யூலை மாதத்திற்குரிய ஓய்வூதியக்கொடுப்பனவுகள் நாளை 2-ம் திகதி அளவெட்டி, காரைநகர், கொடிகாமம், கோப்பாய்க்கும், நாளை மறுநாள் 4-ம் திகதி சுன்னாகம், கரவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பளை ஆகிய இடங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

### திருமலை எல்லை

## ராணுவ முகாம் விஸ்தரிப்பு

திருமலை, வியாழன்

திருமலை மாவட்டத்தின் எல்லையிலுள்ள குரங்குப்பால இராணுவ முகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது

பஸ்கள், ட்ரக்குகள் உட்பட 25 வாகனங்களில் நேற்று இராணுவத்தினர் இந்த முகாமுக்கு வந்து சேர்ந்தனர். [மா]

## இடமாற்றமல்ல அது கொள்ளை!

யாழ்ப்பாணம், வெள்ளி

"தளபாடங்கள் இடமாற்றம்" என்ற தலைப்பில் கடந்த 29-ம் திகதி வெளியான செய்தி தவறு என யாழ் பண்ணை ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் இந்திரராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

தளபாடங்கள் பாதுகாப்பான வேறிடத்துக்கு அகற்றப்படவில்லையென்றும் இனந்தெரியாதநபர்களால் மேற்படி ஆஸ்பத்திரியின் தளபாடங்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆயுள்வேத மூலிகைதோட்டம் அமைக்க ஏற்பாடு

சாவகச்சேரி. வியாழன்

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகில் மூலிகைத்தோட்டத்திற்கெனப் பல வருடங்களுக்கு மேலாக ஒதுக்கப்பட்டு எவ்வித பாவனையும் இன்றிருக்கும் காணியினைத் துப்பரவுசெய்து மிக விரைவில் ஆயுள்வேத மூலிகைத்தோட்டத்தினை அமைக்க சர்வதேச சமாதான சேவை இயக்கம் முன்வந்துள்ளது.

இதன்பொருட்டு, இவ்வியக்கம் இம்மாதம் 3-ம் திகதி முதல் 10-ம் திகதிவரை "கைதடி ஆயுள்வேத மூலிகைத்தோட்ட நிர்மாண வாரமாக"ப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இக்காலப்பகுதியில் மூலிகைத்தோட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள காணிகளை சிரமதானமூலம் துப்புரவு செய்து மூலிகைத்தோட்டத்துக்கு ஏதுவாக அமையச் செய்யவுள்ளார்.

கைதடி நாவற்குளிப் பகுதிப் பொதுநிறுவனங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவுள்ள இப்பணிகளுக்கு கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையின் அத்தியட்சகர் டாக்டர் திருமதி இந்திரா சத்தியநாதன் சகலவிதமான உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார். (எ)

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்க சுகாதார சேவை தொழிற்சங்க வட பிராந்திய பொதுச்சபைக் கூட்டம் திரு. எம். சங்கரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது யாழ் போதனா வைத்தியசாலை ஸ்தான கிளைக்கு நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். எ. நவசிவாயம், உப தலைவர் நா. கந்தையா, செயலாளர் க. ஞானப்பிரகாசம், உப செயலாளர் சி சதாசிவம், பொருளாளர் த சுந்தரராசன், உப பொருளாளர் வி ராஜகோபால் பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. [ச. எ]

## கலாசாரக் குழுவின் நாடகம்

அராலி, வியாழன்

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரியில் ஆகஸ்ட் 4ந் திகதி யாழ் பல்கலைக்கழக கலாசார குழுவினர் வழங்கும் "மண்சுமந்த மேனியர்" பாகம் II என்னும் நாடகம் நடைபெறவுள்ளது. (இ)

## பரீட்சை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமாக விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"இன்றைய போராட்ட சூழ்நிலையில் கல்வியில் பெரும் இடையூறுகள் ஏற்பட்டு மாணவர்களின் கல்வி சீர்குலைந்து வருவது எம்மக்கள் நன்கறிந்ததொன்றே.

"கல்வி சீர்குலைய பல்வேறு காரணங்களிருப்பினும் இதைப் பாழடிக்கும் சில தீயசக்திகளின் செயற்பாடுகளை தொடர்ந்து அனுமதிக்கவே முடியாது.

"இந்தவகையில்கடந்தகாலங்களில் தொடர்ச்சியான கர்த்தால்கள், பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கள் என்ற வரிசையில் பரீட்சைகள் குழப்பப்படுவதும் இடம்பெற்று வந்தன.

எம்எதிர்காலத்தை தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தூரதரிசன நோக்கோடு நோக்காத தீய சக்திகளே எம்மாணவர்களின் கல்வியை சீர் குலைக்கின்றன.

"போராட்ட சூழலில் கல்வி மிக இன்றியமையாதது.

"கல்விக்கு ஏற்படும்பாதிப்பு எம் எதிர்காலத்தையே இருளாக்கி விடும் எனவே போராட்ட சூழலில் ஏற்படும் இடையூறுகளை எதிர்கொண்டு மாணவர்கள் தம் கல்விமீது மிகுந்த அக்கறை செலுத்தி கல்வியைத் தொடரவேண்டும்.

"மேலும் கல்வியில் ஒழுங்கீனங்களை மேற்கொள்வது தவிர்க்கப்படவேண்டும்

"இன்று இடம்பெறும் பரீட்சைகளைக் குழப்பக்கூடிய செயற்பாடுகளை எவர்மேற்கொள்ளினும் அவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கையெடுக்க வேண்டிநேரிடும் என எச்சரிக்கிறோம்" (மா)

## அமைச்சர்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நிலையமொன்றை திறந்து வைத்த பின் கிராமிய வைத்தியசாலை திறப்பு விழாவிற்கு சென்றார். அப்போதே இச்சம்பவம் இடம்பெற்றது. இரு தரப்பினருக்குமிடையே கடும் மோதல் இடம்பெற்றபோது அமைச்சர் தேவநாயகம் வைத்தியசாலையில் புதிய பிரசவ விடுதி ஒன்றைத் திறந்துவைக்கச் சென்றார்

இச்சம்பவங்களைத் தொடர்ந்து அமைச்சர் ஆபத்து எதுவுமின்றி உடனடியாக அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார். [சி-எ]

## செங்கலடி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யளவில் சிட்டைக்குடாவில் இச்சம்பவம் நடைபெற்றது.

### ஆசிரியை பலி

பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய் கொண்டிருந்தபொழுது அவ்வீதியால் வந்து கொண்டிருந்தஆசிரியை திருமதி ஜோன்சன் துப்பாக்கிச் சூடுபட்டுபலியானார். நகரசுத்தி தொழிலாளியான ஒருபெண்ணும் மற்றும் சாந்தகுமார், ரத்தினகுமார் ஆகியோரும் படுகாயமடைந்தனர்.

பின்னர் கவச வண்டியில் ரோந்து சென்ற ஆயுதப்படையினர் வந்தாறுமூலையில் மண் ஏற்றிக் கொண்டிருந்த 'ட்ரக்டரை' நோக்கி சுட்ட பொழுது சாரதியான நாதன் [19 வயது] என்பவர் பலியானார்.

இது இவ்வாறிருக்க செங்கலடி தபால் அலுவலகத்தை திறந்து வைத்த அமைச்சர் தேவநாயகம். அதே பகுதியில் உள்ள ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டை திறந்து வைக்காமல் பாதுகாப்புடன் ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு சென்றடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பயிர் பாதுகாப்புக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வெள்ளி

பயிர் பாதுகாப்புப்பற்றிய விவசாயக் கருத்தரங்கு மருதனமடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் ஆகஸ்ட்6ம்திகதி புதன்கிழமை காலை நடைபெறவுளளது.

## யாழ்-கோட்டை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தெரியவருகிறது.

கோட்டையிலிருந்து ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள இக்கட்டிடங்களை மையமாகக் கொண்டே தீவிரவாதிகள் கோட்டையை நோக்கி பல தடவைகள் 'ரொக்கட்' மோட்டர் தாக்குதல் நடத்தியதாகவும் பாதுகாப்புப் படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்

கோட்டை முகாமுக்கு வரும் ஹெலிகொப்டர் கூட தீவிரவாதிகளால் பல தடவைகள் தாக்குதலுக்குள்ளாகியதையும் படையினர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். (எ-இ)

இந்திய — பாக்.

# எல்லையைத் தாண்டிய பதினெட்டு பாகிஸ்தானியர் சுட்டுக் கொலை

புதுடில்லி, ஜூலை 31

**இந்திய - பாகிஸ்தான் எல்லையைத் தாண்டி இந்தியாவினுள் ஊடுருவ முற்பட்ட பதினெட்டுப் பாகிஸ்தானியர்கள் இந்திய எல்லைக் காவல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.**

இந்தியாவினுள் பாகிஸ்தானியர்கள் உட்புகுவதைத் தடுக்கும்வகையில் இந்திய—பாக் எல்லைப் பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கண்காணிப்பு வேலை நடவடிக்கைகளின்போதே கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்றுவரை இந்திய எல்லையைத் தாண்ட முற்பட்ட சமயம் 18 பாகிஸ்தானியர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களூடாக பாகிஸ்தான்-இந்திய எல்லைப் பகுதிகள் விரிவடைந்துள்ளன. பஞ்சாப் மாநில பிரிவினைவாதிகள் பாகிஸ்தானுக்குள் தப்பிச் செல்லவும், பாகிஸ்தானிலிருந்து அவர்களுக்கு ஆயுத உதவிகள் கிடைக்கவும் இந்த எல்லைப் பகுதிகள் வாய்ப்பாக அமைகின்றன என தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூடவே இந்த எல்லைப்பகுதியூடாகவே போதைவஸ்துக் கடத்தல் நடவடிக்கைகளும் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே இந்திய-பாக். எல்லை கடும் கண்காணிப்புக்குள்ளானது.

சட்ட விரோதமாக இந்திய எல்லையைத் தாண்டியபோது கூடுதலான பாகிஸ்தானியர்கள் ஒரு வாரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டது இதுவே முதல்தடவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

கரீபியன் கடலில்

## ஆடம்பரக் கப்பலில் தீ! பயணிகள் உயிர்தப்பினர்

நாஸாவோ, ஜூலை 31

கரீபியன் கடலில் பஹாமஸ் தீவுக்கு அருகே பயணிகள் ஆடம்பரக் கப்பல் ஒன்று தீப்பிடித்துக்கொண்டது. ஆயினும் இதிலிருந்த பயணிகள் உயிராபத்து எதுவுமின்றி தப்பிக்கொண்டனர்.

பஹாமஸ்தீவின் தலைநகரான நாஸாவோக்கு 50 மைல்கள் தொலைவில் கடலில் நங்கூரமிட்டிருந்தபோதே இக் கப்பலில் தீப்பிடித்துக்கொண்டது.

பன்னிரெண்டு பயணிகள் மட்டுமே தீக்காயங்களுக்குள்ளானுர்கள். ஏனையவர்கள் உயிர் காப்புப் படகுகள் மூலமாகவும் கரையோரக் காவல் படை கப்பல்கள் மூலமாகவும் பாதுகாப்பாக கரைசேர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஆயிரம் பயணிகள் வரை இந்த உல்லாசக் கப்பலில் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களில் அநேகர் அமெரிக்கப் பயணிகளாவர் எனவும் அறியப்படுகிறது.

எம். எல். ஸி. என்ற இக் கப்பலில் சமையற்கூடப் பகுதியிலேயே முதலில் தீப்பிடித்து பின்னர் ஏனைய பகுதிகளுக்கும் பரவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க கரையோர பாதுகாப்பு படைப்படகுகள் உயிர் காப்பு நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயல்பட்டிருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

வடஇந்தியாவில் வெள்ளம்:

## உத்தரப் பிரதேஷில் 87 பேர் உயிரிழப்பு!

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவின் வடமாநிலத்தின் பல பகுதிகளில் பலத்த மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேஷில் மழை வெள்ளத்தினுல் இதுவரை 87 பேர் உயிரிழந்துள்ளனர். பல வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளதுடன், நீரினுல் அடித்தும் செல்லப்பட்டுள்ளன.

உத்தரப்பிரதேஷின் கிராமப்புறப்பகுதிகளே வெள்ள நீரினுல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஹமீர்பிரர் என்ற பகுதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, உணவு விநியோகம்போன்ற அத்தியாவசிய நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளன. இந்திய இராணுவத்தினரும் ஏனைய தொண்டர்களும் வெள்ள நிவாரணப் பணிகளில் இறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீட்புவேலைகளில் ஈடுபட்டிருந்த இரு இந்திய சிப்பாய்கள் நேற்று நீரில் அடித்துச்செல்லப்பட்டு மரணமானுர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில்

## இலங்கை தமிழர் பிரச்னை குறித்து ம. பொ.சி விளக்கம்

சென்னை, ஜூலை 31.

தமிழக சட்ட மேலவைத் தலைவர் திரு ம. பொ. சி சிவஞானம் நேற்றுத் தமது ஒரு மாத கால சுற்றுப் பயணத்தின் பின்னர் தமிழகம் திரும்பினுர்.

திரு ம. பொ. சிவஞானம் அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டதுடன் விரிவான சுற்றுப் பயணங்களையும் மேற்கொண்டார்.

திரு.ம.பொ.சி அமெரிக்காவில் இலங்கைத் தமிழர் பிரச்னைகள் பற்றியும் பிரஸ்தாபித்துள்ளார்.

இவர் இங்குள்ள இந்திய மற்றும் இலங்கைத் தமிழ் மக்கள் உட்பட அமெரிக்கர்களிடமும் இலங்கைப் பிரச்னை பற்றியும் இப் பிரச்னையில் இந்தியா வகித்து வரும் பங்குபற்றியும் விளக்கங்களை வழங்கினுர்.

"அமரர் அமரதாஸ

## தமிழ் மீதும் தமிழர் மீதும் மதிப்பு வைத்திருந்தார்"

மானிப்பாய், வியா.

"தமிழ் மக்கள் மீது சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் இந்தக் காலத்தில் தமிழ் மொழி மீதும், தமிழ் மக்கள் மீதும் பெரு மதிப்பு வைத்திருந்தவர் அமரர் கே. ஜி. அமரதாஸ"

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு சு. வித்தியானந்தன் மறைந்த பிரபல சிங்கள எழுத்தாளர் கே.ஜி. அமரதாஸவின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் எடுத்துக்கூறினுர்.

யாழ். பூபாலசிங்கம் மண்டபத்தில் டாக்டர் நந்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வித்தியானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அமரர் அமரதாஸ தமிழ் அபிமானியாகவும் தமிழர்களின் நல்ல நண்பராகவும் திகழ்ந்தார். அவரது இழப்பு ஒரு பேரிழப்பென்றே சொல்லவேண்டும்

டாக்டர் நந்தி தமது தலைமையுரையில்தமிழர்களது நல்ல இலக்கிய நூல்களை மொழிபெயர்ப்பதில் மிக்க ஆர்வம் காட்டியவர் திரு. அமரதாஸ என்றும் சிங்களமொழியிலான பாரதியாரின் கவிதை நூலை ஆக்கி நமக்குப் பெருமை தேடித் தந்தவர் அவர் என்றும் அனைத்து இலக்கியகாரர்களாலும் அவர் நேசிக்கப்பட்டு வந்தவர் என்றும் கூறினுர்.

திரு ஜீவா பேசுகையில் தமிழ் இளம் எழுத்தாளர்களுக்கு பரிசுகள் கிடைப்பதற்கு வழிதேடியவர் அவர் என்றும் கூறினுர்.

திருவாளர்கள் முருகையன், ஈழத்துச்சோமு, சிதம்பரதிருச்செந்திநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ)

வீரமணி ஐயருக்கு

## 'சாஹித்திய சாகரம்' பட்டமளித்து கௌரவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இலங்கையில் மாத்திரமன்றி இந்தியாவிலும் புகழ் பெற்ற முத்தமிழ் வித்தகராகத் திகழும் திரு. என். வீரமணி ஐயரின் பாடல்கள் தென்னிந்தியப் பாடகர்களாற் பாடப்பெற்று இசைத் தட்டுக்களாகத் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவியுள்ளன."

இவ்வாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வீரமணி ஐயரின் சேவைகளைப் பாராட்டி நடாத்தப்பெற்ற விழாவிற் தலைமை தாங்கிப் பேசிய கலாசாலை அதிபர் செல்வி சின்னப்பு குறிப்பிட்டார்.

விரிவுரையாளர் திரு. க. வீரசிங்கம் பேசுகையில் பாடலை ஒருவர் இயற்ற இன்னெருவர் இசையமைக்க வேறெருவர் பாடுவது வழக்கமான ஒன்று. ஆனுல் வீர ஐயரிடம் மூன்று திறமைகளும் ஒருங்கே இணைந்துள்ளன, என்றுர்.

சைவம், இஸ்லாம், கிறிஸ்தவமாகிய சமயங்கள் சார்ந்த பாடல்களையும் நாட்டிய நாடகங்கள் பலவற்றிற்கும் வீரமணிஐயர் பாடல்கள் இயற்றி பெரும்புகழ் பெற்றிருக்கிறுர் என்று விரிவுரையாளர் யோ. பெனடிக்ற்பாலன் குறிப்பிட்டார்.

"சாஹிகித்ய ஸாகரம்" என்ற கௌரவப் பட்டம் திரு வீரமணிஐயருக்கு அளிக்கப்பட்டது. விழா அமைப்பாளர் திரு. இ. துரைராசா திரு வீரமணிஐயருக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். கலாசாலை சார்பில் சங்கீத பூஷணம் வாழ்த்துப் பத்திரத்தை வாசித்து வழங்கினுர்.

இறுதியில் திரு. வீரமணி ஐயர் அனைவர்க்கும் நன்றி தெரிவித்துப் பேசினுர். [சஎ]

## இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 16 (1986.8.1)
கிழமை: வெள்ளி
திதி. ஏகாதசி மு இ வரை
நட்சத்திரம் ரோகிணி
மு.ப வரை

மேடம்: உடல் நலம் பாதிக்கப்படலாம் தொழிலும்பாதிக்கப்படலாம் இன்னலில் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். அமைதி நன்று.

இடபம்: குறுக்கு வழித் தலையீடு விபரீதத்தைக் கொடுக்கும். குடும்பத்திலும் பூசல்கள் தலை தூக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

மிதுனம்; கடமையில் ஆர்வம் பிறக்கும். உயர்ந்த எண்ணங்கள் புகழின் உச்சத்திற்கு கொண்டு செல்லும். குடும்ப மேம்பாடுமுண்டு.

கடகம்: சிறுவிடயம் கூட சிரமமாகத் தோன்றும். இதய பாரம் வேதனைப் படுத்தும். தொழிலிலும் மந்த நிலை காணும்.

சிங்கம்: தாய் வழித் தனமும் சேரும். தன் தொழில் செய்வதற்கு உகந்த நாள் பிரயாணமொன்றுக்கும் வழிகோலப் படலாம்.

கன்னி: உழைப்பில் உயர்வு காணுவீர்கள். தூர தேச வாசம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். குடும்ப சுப கருமமும் ஏற்படலாம்.

துலாம்: அபாயகாரிக் கேடு. பகைகள் தோன்றக் கூடும் கல்வியிலும் மந்தநிலை காணும். தெய்வ வழிபாடு விருமபத்தக்கது.

விருச்சிகம்: இல்லச் சேர்க்கை உண்டு. அறிஞர்கள் சந்திப்புமுண்டு. அறநெறியிலும் ஆவமுண்டு சுப தினம்.

தனுசு: பாதையில் பழுது உண்டு. பகைவர்கள் காத்திருப்பர். வியாபார நஷ்டமுமுண்டு. குடும்பக் கோளாறும் ஏற்படலாம்.

மகரம்: நீண்ட நாள் பிணி இன்று நிவர்த்தியாகும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். யாத்திரைப் பிரியமும் உண்டு.

கும்பம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதிய தொழில்களை மனம் நாடும் குடும்பம் இன்று கலைக் கோயிலாக மாறும்.

மீனம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசன மகிழ்ச்சியுண்டு. நேர்முகப் பரீட்சைக்கும் உகந்த நாள்.

திருமலை வே. இரவீந்திரன்

## சைக்கிள் திருட்டு

கிளிநொச்சி, வியா.

கிளிநொச்சியில ஏற்பட்ட பதற்றநிலையைத் தொடர்ந்து சாவகச்சேரிக்கு கல்வி கற்க வந்த மாணவனின் சைக்கிள் சாவகச்சேரி சந்தையில் திருடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இந்துமகா வித்தியாலய மாணவன் க, சத்தியசீலனின் சைக்கிளே திருட்டுப்போயுள்ளது. (இ)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மு. விஸ்வலிங்கம்
தோற்றம்: 23-01-1918
மறைவு: 13- 8- 1985
திதி: 1-8- 1986

மண்ணிலே உந்தன் மா
உடலே மாண்டதையா
கண்ணிலே நிதமும்
உந்தன் காட்சியோ
தெரியுதையா
எண்ணவே நெஞ்சமெல்
லாம் ஏங்கித் தவிக்
குதையா
விண்ணிலே எந்தனுக்
காய் வேண்டுவீர் நித
முமையா.
வாழ்க்கை துணையாள்
தனியளாய் தான்துடிக்க,
பிள்ளைகள், சகோதரர்,
உறவினரும் துயர்கொள்ள
உமது ஆவி பிரிந்த
துவோ

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்,
மைத்துனிமார்,
பேரப்பிள்ளைகள்.
இல 6, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C 3772)

# அரச வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு

பண்டத்தரிப்பு, வியாழன்

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவ்வருட மூன்றும் காலாண்டுக்கான மருந்து வகைகள் இதுவரை வழங்கப்படாததினுல் பல்வேறு வைத்தியசாலைகளிலும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. தற்போதைய போக்குவரத்து கஷ்டங்களினுல் தேவையான மருந்துவகைகள் கொழும்பிலுள்ள அரச மத்திய மருநதுக் களஞ்சியத்திலிருந்து கிடைக்கவில்லையென்றும், இவைகள் வந்துசேர்ந்தவுடன் உடனடியாக வைத்தியசாலைகளிற்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் யாழ். சுகாதார திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (ஊ-இ)

## 'சுகாதார சேவையாளர்கள் அரச காணிகளில் குடியேற அனுமதியளிக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

''சுகாதார சேவையில் ஈடுபடும் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் சொந்தமான குடி நிலம் இல்லாதவர்கள், எனவே, இவ்வூழியர்களுக்கு அரசுககுச் சொந்தமாகவுள்ள நிலங்களில் வீடுகட்டிக் குடி இருப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும்''.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை அரசினர் போதனு வைத்தியசாலை, அரசாங்க சுகாதார சேவை வடபிராந்திய தொழிற் சங்கம் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபகதுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

திரு. எம். சங்கரன் தலைமையில் மேற்படி சங்கப் பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுகாதார அமைச்சருக்கும், இத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டது.

சுகாதார அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜர்ல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''சுகாதார சேவையிலீடுபடும் ஊழியர்கள் காலத்துக்குக் காலம் இடமாற்றங்களைப் பெறுகிருர்கள். அப்படி இடமாற்றம் பெற்றுக் கொள்ளும் வைத்தியசாலைக்கு அண்மையில் இவ்வூழியர்களுக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுப்பதற்கு எவரும் முன்வருவதில்லை.

''யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமைபுரியும் சுகாதார சேவை ஊழியர்கள் அரசுக்குச் சொந்தமெனக் கருதப்படுகிற இடங்களில் குடிசைகளை அமைத்து வாழ்வதற்கு சில அதிகாரிகள் தடுக்கிருர்கள்.

''எனவே சுகாதார சேவை ஊழியர்களுக்கு அரசாங்கம் வீடு கட்டி வாழ்வதற்கு நிலங்கள் வழங்க வேண்டும்''. (ச-ர)

## கிளைக்குழு உறுப்பினர்கள்

கொழும்புத்துறை. வியாழன்

யாழ். மாநகர பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கொழும்புத்துறை கிழக்கு 21ம் கிளையின் கிளைக்குழுத் தேர்தல் கூட்டுறவுப் பரிசோதகர் திரு அ சு யேசுராசா தலைமையில் நடைபெற்றது. இக்கிளைக் குழுவிற்கான ஒன்பது உறுப்பினர்களும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:

திருவாளர்கள்: க மார்க்சண்டு, இ. விஜயகுமார், செ. சண்முகநாதன், செ. தியாகராசா, ஐ. பேரானந்தம், வி. திருநாவுக்கரசு, க. இராஜதுரை, ச. இராசையா, சி. மகேசன். (இ)

## யாழ். நகரில் 4 லட்சம் ரூபாவில் வடிகால்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாநகரசபை எல்லையுள் இருக்கும் தாழ்ந்த நிலப்பகுதிகளைக்கொண்ட இடங்களில் குடியிருக்கும் மக்கள் மழைகாலங்களில் குடிபெயர்ந்து செல்கின்ற நிலைமையை அகற்றும் நோக்கத்துடன் நான்கு லட்சம் ரூபா செலவில் புதிய வடிகால்கள் அமைக்கப்படுகின்றன. [ச-இ

## கையெழுத்துப் பத்திரிகையின் நூறுவது இதழ்

அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினரால் 1971 ம் ஆண்டு மே மாதம் 28 ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'அறிவொளிக்கலை' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆகஸ்ட் மாதம் 1 ம் திகதி இன்று நூறுவது இதழாக வெகு சிறப்பான முறையில் வெளிவருகிறது.

'அறிவொளிக்கலை' என்கிற நாமம் இக்கையெழுத்துப் பத்திரிகைக்குச் சூட்டப்படு முன்னர் 1968 ம் ஆண்டு கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'வெண்ணிலா' என்ற பெயரிலும், 1970 ம் ஆண்டு திரு. ஐ வரதரஜன், திரு. சி. சிவதாசன் இருவரையும் ஆசிரியராகக்கொண்டு இளைஞர் உதயம் என்ற பெயரிலும் வெளிவந்தது.

1971 ம் ஆண்டு திரு. இ அரசகேசரியும், திரு. இ வைகுந்தவாசனும் இணையாசிரியர்களாக 'அறிவொளிக்கலை' என்கிற நாமத்தைச் சூட்டிப் பத்திரிகையை தொடர்ந்து நடாத்தி வந்தனர்

பின்னர் திரு. செ. செல்வலிங்கம், திரு. இ. கருணாகரன் ஆகியோர் இவ்வறிவொளிக்கலையின் ஆசிரியர்களாகச் செயல்பட்டனர்.

தற்போது திரு. த குமரேஸ்வரன், திரு. ப. சசிதரன் ஆகியோர் இணையாசிரியர்களாக இருந்து இதனை வெளியிட்டு வருகின்றனர்.

ஆண்டு மலர்கள் வெகு சிறப்பான முறையில் வெளியிடப்படுகின்ற பிரபல எழுத்தாளர்கள் இவ் வெளியீட்டு விழாக்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள 99 இதழ்களிலும் பிரபல எழுத்தாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள் உட்பட அரியாலை கிராமத்தைச் சேர்ந்த இரு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கதை, கவிதை, கட்டுரை. அறிவியல். சோதிட கட்டுரைகளை எழுதியுள்ளனர்

சாதாரண காலங்களில் 60 பக்கங்களும், ஆண்டு மலராயின் 120 பக்கங்களுக்குக் குறையாமலும் வெளியிடப்படுகின்றது.

அறிவொளிக்கலையில் தொடராக வெளியிடப்படுகின்ற நாவல்கள் பின்பு தனியான ஒரு வெளியீடாகவும் வெளியிடப்படுகின்றன.

'அறிவொளிக்கலை' கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகள் பலவற்றை நடாத்தியுள்ளது.

யாழ் குடாநாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க வாசிகசாலைகள் 'அறிவொளிக்கலை' இதழ்களை எடுத்துச்சென்று வாசிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலைய நூல் நிலையத்தில் இயங்கும் இரவல் கொடுக்கும் பகுதியில் அறிவொளிக்கலையின் சகல இதழ்களும் வாசகர்களுக்கு இரவல்கொடுக்கப்படுகின்றன அந்தளவுக்கு எல்லா இதழ்களும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

- பவளமணி

## வடக்கு கிழக்கில் 10 லட்சம் தமிழ் மாணவர் பாதிப்பு

கொழும்பு, வியாழன்

வடக்கு கிழககில் தற்போதைய சூழ்நிலையில் அப்பகுதிகளிலுள்ள சுமார் 10 லட்சம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது

இப்பகுதி மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் கூட முற்றாக வழங்கப்படவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ய-ஊ]

# 'கல்வித் திணைக்களம் உதவ வேண்டும்'

கொழும்புத்துறை, வியாழன்

''மகாவித்தியாலயத்திற்கு விஞ்ஞான ஆய்வுகூடம், மரவேலைக்கூடம், மனையியற்கூடம் என்பன இன்றியமையாத தேவைகளாக உள்ளன இக்குறைபாடுகளைப் போக்கக் கல்வித்திணைக்களம் முன்வர வேண்டும்''

கட்டுவன்புலம் மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மகாவித்தியாலய அதிபர் திரு. க. இராசதுரை கேட்டுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசும்பொழுது கூறியதாவது: ''எமது பாடசாலையுடன் ஒரே காலத்தில் மகாவித்தியாலயமாகத்தரமுயர்த்தப்பட்ட பல மகாவித்தியாலயங்களுடன் ஒப்பிடுகின்றபோது இம்மகாவித்தியாலயம் மிகவும் பின்தங்கிய நிலையிலும் வசதிகள் இன்றியும் காணப்படுகின்றன. இதனைத் கல்வி அதிகாரிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். பாடசாலை அபிவிருத்திச்சபையின் உதவியுடன் முப்பதினையிரம் ரூபா செலவில் வகுப்பறைகளும், மதிலும் கட்டப்பட்டுள்ளன. இருவருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட நீர்த்தாங்கி கூட நீர் விநியோகிக்க முடியாதவாறு பழுதாகக் கூடிய நிலையிலுள்ளது. இதற்கு வேண்டிய நீரிறைக்கும் இயந்திரத்தையும் பாடசாலை அபிவிருத்திச்சபை வாங்கியுள்ளது. நீர்க்குழாயை பொருத்தி நீர்விநியோகத்தை ஏற்படுத்தக் கல்வித்திணைக்களம் உதவவேண்டும்''.

யாழ் பிரதம கல்வியதிகாரி திரு. கே சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இம்மெய்வல்லுநர் போட்டியில் சிவநாத பிள்ளை இல்லம் முதலாம் இடத்தையும், பசுபதி இல்லம் இரண்டாம் இடத்தையும் பண்டிதமணி இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன. [இ]

## 'சேவை நோக்குடன் செயலாற்றுகிருர்கள்'

யாழ்ப்பாணம், வெள்ளி

''சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் வடபிராந்திய மினிபஸ் சங்கத்தினர் மக்களுக்கு நல்ல சேவை ஆற்றிவந்துள்ளனர் எந்தவிதமான பிரதி உபகாரத்தையும் எதிர்பாராது பொதுசேவையை நோக்காகக் கொண்டு உறுப்பினர்கள் செயல்பட்டுவருகின்றனர்''

வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்கத்தின் பொதுச் சபைக்கூட்டத்தில் உரையாற்றிய பஞ்சாயத்து அமைப்பளர் திரு பொன். மதிமுகராசா இவ்வாறு கூறினுர்.

புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. இ செல்வராஜா தமது நன்றி உரையின்போது மினிபஸ் சேவை சம்பந்தமான பிரச்சனைகளைப் பொதுமக்கள் தெரிவித்தால் அவற்றிற்குபரிகாரம் காண்போம். எனக்கூறினுர். [வா - எ]

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் ஜேர்மனி
பிரான்ஸ் கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிருர்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்

டிரைவர்(Driver), பணிப்பெண்

சவுதி அரேபியா

கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்ட். விசா, ரிக்கட்டிங் என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

Group Atlantic Travels

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

V. M Balasingam
HOTEL ORCHID INN,
571/6, GALLE ROAD,
WELLAWATTE COLOMBO-6.
T P. 583916 A 1004

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்,
அவுஸ்திரேலியா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

சவுதிஅரேபியா
கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள் 20 நாட்களுக்குள் செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-

லிபியா குவைற்
டுபாய் ஆகிய நாடுகளுக்கும்

உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(பெற்ரோலியம் கூட்டுத்தாபன முன்பாக, ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A-796)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 1-8-86

# 'இராணுவத்தீர்வில் நாம் வெற்றிபெறவில்லை' -'லலித்'

கொழும்பு, வியாழன்

''இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல, இம் முயற்சியில் நாம் வெற்றிபெறவில்லை இவ்வாறான இராணுவ முயற்சிகள் மேலும் பிரச்னையைச் சிக்கலாக்கும்''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கொழும்பு பம்பலபிட்டி திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில் கடந்த புதனன்று நடைபெற்ற வைபமொன்றில் கலந்து கொண்டுபேசுகையில்கூறினார்.

பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி சகல இனமக்களும் தமக்கிடையில் புரிந்துணர்வுடன் செயல்படுவதேயாகும். மக்களை மக்கள் அழிக்கும் செயல்களால் ஒருபோதும் பிரச்னை தீர்ந்து விடப்போவதில்லை என்று கூறிய அமைச்சர்திரு.லலித் அத்துலத்முதலி அதேவேளை இராணுவ நடவடிக்கைகளை எடுச்காதுவிடில் தீவிரவாதிகளின் செயல்கள் உச்சகட்டத்தை அடைந்துவிடும்என்றூர். (ஏ-கூ)

## கொழும்புத்துறை மக்கள் நிதி உதவி

யாழ்ப்பாணம், வியாழன்

படையினரின் தாக்குதலுக்கு பலியான குருநகர் மீனவர் நிவாரண நிதியத்திற்கு கொழும்புத்துறை பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட பணம், ரூபா 3561 குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் கொழும்புத்துறை மேற்கு இணக்க சபையினரால் கையளிக்கப்பட்டது. [சி]

## ஆகஸ்ட் 16ல் அரசு-கூட்டணி மீண்டும் பேச்சு

கொழும்பு, வியா:

இனப்பிரச்னை குறித்து கூட்டணிக்கும் அரசுக்கும் இடையிலானப் பேச்சுக்கள் மீண்டும் கொழும்பில் எதிர்வரும் 16ம் திகதி முதல் ஆரம்பமாகித் தொடாந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [எ]

## சாரதியும் கிளினரும் படுகொலை

வவனியா, வியா.

முல்லைத்தீவிலிருந்துகொழும்புக்கு வானில் மீன் ஏற்றிச் சென்ற சாரதியும் கிளினரும், காடையர் கோஷ்டியினுல் படுகொலை செய்யப் பட்டுள்ளனர்.

வவனியாவுக்கும் மதவாச்சிக்கும் இடையில் உள்ள புளுவ என்னுமிடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

தண்ணீர் ஊற்றைச்சேர்ந்த எஸ் வேலாயுதம் (சாரதி), ஏ, கறுப்பையா (கிளினர்) ஆகியோரே கொலைசெய்யப் பட்டவர்களாவர். [மா]

# யாழ்ப்பாணத்தில் தமிழ் தகவல் நிலையம்

யாழ்ப்பாணம் வெள்ளி

யாழ்ப்பாணத்தில்.தமிழ் தகவல் நிலைய வடபிராந்திய செயலகம் ஒன்று அமைக்கப்படவிருப்பதாக செயலக பொறுப்பாளர் திரு தே.பிரகலாபன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

''தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பேச்சுவார்த்தை மூலம் திட்டமிட்ட சதியினுல் தோற்கடித்துவிட பல்வேறு வெளிச் சக்திகள் முனைப்புடன் செயலாற்றும் காலகட்டமிது. எனவே காலத்தின்தேவையை உணர்ந்து தமிழ தகவல்நிலைய வடபிராந்தியச் செயலகம் இங்கு ஆரம்பிக்கப்படுகிறது. இது விடுதலைப்போராளிகளுக்கு பக்கத்துணையாக களத்தில்நின்று இயக்க சார்பின்மை. சுயாதீனம் ஆகியவற்றை நிலைநாட்டி குறிப்பிட்ட நோக்கங்களிற்காகமட்டுமே செயலாற்றும் இந்நிலையம் இலங்கைக்கு வெளியில் இயங்கும் தமிழ் தகவல் நிலையச் செயலகங்களுடன் தொடர்புபட்டு இங்கிருந்து விடுதலைப்போராட்டச் செய்திகளையும் புகைப்படங்களையும் சேகரித்து உலகநாடுகளிற்குப் பரப்புவதுடன் விடுதலை இயக்கங்களினுல் மக்கள் மத்தியில் முன்வைக்கப்படும் நல்லசெயற்திட்டங்கள் உட்பட மக்கள் சேவைத்திட்டங்களிற்கும் ஆதரவு வழங்கும்'' [இ-எ]

## மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் புதன்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவர்கள் தம்மைவிட்டுப் போவதற்கான பிரியாவிடை-ஒன்றுகூடல் வைபவம் பல்கலைக்கழக மண்டபத்தில் இம் மாதம் 3ந்திகதி நடைபெறவிருக்கிறது. இதற்கு பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம்பிரதமவிருந்தினராக பங்குபற்றவிருக்கிருர். (க)

# 'பரிசாரகர்களின் சேவை முக்கியமானது'

பண்டத்தரிப்பு, வியா.

''ஆஸ்பத்திரி ஊழியர்களைப் பொறுத்தவரையில் பரிசாரகர்களின் சேவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நோயாளர்களின் நலனில் அதிக அக்கறை செலுத்தி அவர்களைக் குணப்படுத்தும் பெரும் பொறுப்ட வைத்திய அதிகாரிகளிடம் மட்டும் தங்கியிருக்கவில்லை அங்கு கடமையாற்றும் பரிசாரகள் மற்றும் சிற்றூழியர்களிடமும் தங்கியுள்ளது. ஆகவே இந்த ஊழியர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் நன்குணர்ந்து சேவையாற்ற வேண்டும்.''

இவ்வாறு யாழ். பிரதேச சுகாதாரசேவை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம். ஜெகநாதன் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் இடம் பெற்ற பரிசாரகர்களுக்கான (அற்றண்டன்)பயிற்சிநெறியை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சிமாவட்டத்திலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட 75 ஆண். பெண் பரிசாரகர்களுககான மூன்றுமாத பயிற்சிநெறி தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் கடந்த மாதம் 21-ம் திகதியன்று ஆரம்பமானது தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் டாக்டர் ஜெகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில், ''பயிற்சிபெறத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சகலரும் தங்கள் பயிற்சிக் காலத்தில் சிறந்தமுறையில் திருப்திகரமான பயிற்சிகளைப் பெறுவதோடு நோயாளர்களின் நலனிற்காக தங்கள் சேவையை அர்ப்பணிக்கத்தயாராகஇருக்க வேண்டும்''என்றூர்.

வைத்தியசாலை பிரதம தாதி உத்தியோகத்தர் திரு. எம். கனகரத்தினம், பிரதம எழுதுவினைஞர் திரு எஸ் சிவசுப்பிரமணியம், வைத்திய கலாநிதி எம். பத்மநாதன், சுகாதார பரிசோதகர் திரு ரி. இராமச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினுர்கள். [இ]

## இன்று 100வது இதழ் வெளியீட்டுவிழா

யாழ்பபாணம், வெள்

''அறிவொளிக்கலை'' கையெழுத்துப்பிரதியின் 100வது இதழ் வெளியீட்டு விழா ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய முத்தமிழ் அரங்கில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

நிலைய முன்னுள் தலைவர் திரு. செ. இராசரத்தினம் மங்கள விளக்கேற்றிவைப்பார் டாக்டர் ப. சசிதரன் தலைமையில் நடைபெறும்இவ்விழாவில் அமிர்தகங்கை ஆசிரியர் திரு. செம்பியன் செல்வன் வெளியீட்டுரைநிகழ்த்துவார். திருநெல்வேலி இந்துவித்தியாலய அதிபர் திரு. சீ. வைகுந்தசாமி, புனிதசம்பத் திரிசிரியார் கல்லூரி ஆசிரியர் திரு. க. கலாமணி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

நன்றியுரையைஅறிவொளிக்கலை இணை ஆசிரியர் திரு த. குமரேஸ்வரன் நிகழ்த்துவார். [ச]

## அகதிகளுக்கு உதவிகளை நிறுத்த அமைச்சு முடிவு

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திரியாய் கிராமத்திலிருந்து வந்து தஞ்சமடைந்திருக்கும் சுமார் 400 குடும்பங்களுக்கு அரசாங்க உதவிகளை நிறுத்துமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபரை அகதிகள் புனர்வாழ்வு அமைச்சு கோரியுள்ளது.

இதனுல் அகதிகளாக வந்த மக்கள் பெரும் வேதனையும் கலக்கமும் அடைந்துள்ளார்கள். திரியாய் வழமைக்குத் திரும்பிவிட்டதாகவும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதாகவும் அகதிகளை திரும்புமாறும் மேலும் அந்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுளளது. [இ]

## விவசாயப் பயிற்சி நெறி

மண்டைதீவு புதன்

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிநிலையததில் நடைபெற்றுவரும் மூன்றுயாதகுறுகிய காலப் பயிற்சித்திட்டத்தின் மூன்ருவது பொதுவிவசாயப் பயிற்சிநெறி இம்மாதம்முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது,

இப்பயிற்சி நெறித் திட்டத்தில் இம்முறை 30 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (வா)

## இடம்பெயர்ந்த அகதிகள்

கொழும்பு புதன்

உத்தேசமாகாண சபைகள் நிறுவப்பட்டதும் தற்போது அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்கள் அவர்களின் முன்னைய இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்று தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுத் தெரிவித்துள்ளார். (சி.இ)

# நல்லூர் கந்தசுவாமிகோவில் உற்சவகால ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

''இன்றைய சூழ்நிலையில் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கக்கூடி வகையில் தொண்டர்களைத் தயார்படுத்திக் மக்கள் சமயநிகழ்ச்சிகளோடு வீடுதிரும்பக் கூடியதாகவிருக்கவேண்டும். இதற்கு மாநகரசபைமையமாகவிருந்து செயற்படும். எனவே தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியையும், ஒத்தாசையையும் வழங்கவேண்டும்.''

இவ்வாறு, நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாகால ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான மாநாட்டில்பேசும்போது யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் கூறினுர்.

நலலூர் இந்து விடுதியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மாநகரசபையின் சுகாதாரம், மின்சாரம் மராமத்துப் பகுதி ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் உட்பட தொண்டர் ஸ்தாபனங்களின் தலைவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில் ''திருவிழாக் காலங்களில் பொலிஸார் சேவையில் ஈடுபடமாட்டார்கள் எனவே எல்லாத் தொண்டர் ஸ்தாபன அமைப்புக்களும் கூடிய அக்கறை எடுத்துசேவையாற்ற வேண்டும். சென்ற முறை தொண்டர்கள் திறம்படச் செயற்பட்டமையினுல் எத்தனையோ பிரச்னைகள் இல்லாமலிருந்தன'' என்றூர்.

ஆலய உற்சவத்தின்போது கடைகளிலும், வாகனங்களிலும் விளம்பர நோக்கங்களுக்காக ஒலிபெருக்கியை உபயோகிப்பது கடுமையாகத் தடை செய்யப்படுமென்றும், திருவிழா காலங்களில் கடைகளில் எதுவித சத்தங்களையும் உண்டாக்கக் கூடியவாறுஒலிபெருக்கிகளைப் பாவிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும இக்கூட்டத்தில் தீர்மானிக்ப்பட்டுள்ளது.

1982ம் ஆண்டு நல்லூர்கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தின் போது அனுமதிவழங்கிய தண்ணீர் பந்தல்களும் இம்முறையும் அனுமதி வழங்குவதற்கு யாழ் மாநகரசபை முன்வந்துள்ளது.

வருடாந்த உற்சவத்தின் போது செய்யப்படவேண்டிய ஒழுங்குகள்பற்றிமேலும்இறுதி முடிவுகளை எடுப்பதற்காக இம்மாதம் 7ம்திகதி பிற்பகல் நல்லூர் இந்துவிடுதி மண்டபத்தில் கூட்டமொன்றை யாழ் மாநகரசபை ஆணையாளர் நடாத்தவுள்ளார். இக்கூட்டத்தில் தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். (ச-வா-இ)

## மாற்றுஆலோசனை

கொழும்பு வியா

மாகாணசபை திட்டத்தின் மாற்று ஆலோசனைத் திட்டத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பண்டா-செல்வா ஒப்பந்தஅடிப்படையில்தயாரித்து வருவதாகத் தெரியவருகிறது. (சி)

## ஆகஸ்ட் 10-ல் புலமைப் பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆரும் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கான (5-ந் தரம்) புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் இப் பரீட்சைக்கு ஒன்பதாயிரத்துக்குமேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளார்கள். 81 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும். [ச-இ]

## மரண அறிவித்தல்

### செல்லமுத்து
(சோதிடர்)

மாகியப்பிட்டி சோதிடர் செல்லமுத்து காலமானுர். அன்னரது பூதவுடல் 1-8 86 (இன்று) பகல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

[C3807]

### கதிரன் பசுபதி

கதிரன் பசுபதி [பிரபல ஆலய கட்டட ஒப்பந்தகாரர், திருப்பணி சிற்பாசாரியார்] 31-07-86 அன்று பிற்பகல் 4-10 மணிக்கு காலமாகிவிட்டார் அன்னாரின் மரணச்சடங்கு 1-8-86 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு தொத்தனை சப்பட்டியால் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

இங்ஙனம்
மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C3809)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.